பழனியிலுள்ள பழனியாண்டவர் கலைக்கல்லூரி.

* வினா எண். 464—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனி அருள்மிகு பழனி ஆண்டவர் கலைக்கல்லூரியில் M.Com., M.A. (வரலாறு) ஆகிய முதுகலை பட்ட வகுப்புகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

(ஆ) இவ்வகுப்புகளை விரைவில் ஆரம்பிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ): பழனி அருள்மிகு பழனி ஆண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரியில் எம். காம். எம். எஸ். ஸி. (கணிதம்) மற்றும் எம். ஏ. (பொருளாதாரம்) ஆகிய முதுகலைப் பட்ட வகுப்புகள் ஆரம்பிக்க மதுரை காமராஜ் பல்கலை கழகத்தை கேட்கப் பட்டது. 1980–81-ம் ஆண்டிலிருந்து எம். காம். வகுப்பு மட்டும் புதிதாக ஆரம்பிக்க மதுரை காமராஜ் பல்கலை கழகம் அனுமதி அளித்துள்ளது. அதன்படி, 14–10–1981 தேதி முதல் அவ்வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, பழனியிலே இருக்கக்கூடிய அந்தக் கல்லூரி வளர்ந்து வரக்கூடிய கல்லூரியாக இருக்கின்றது. அந்தக் கல்லூரியிலே எம்.காம்., எம்.ஏ, (வரலாறு) போன்ற பாடங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதுடன் சென்ற ஆண்டு பி.காம் வகுப்பிற்காக விண்ணப்பித்த மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. ஆகவே இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய தேவையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அமைச்சரவர்கள் அங்கே இந்த பாடங்களை எல்லாம் ஆரம்பிப்பதற்கும் அந்தப் பகுதியிலுள்ள மாணவர்களின் சிரமங்களை தவிர்ப்பதற்கும் உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, அரசினுடைய ஆணையை வைத்து இந்த வகுப்புகளை ஆரம்பிக்க இயலாது. பல்கலைக்கழகத்தினுடைய அனுமதி தேவைப்படுகின்றது. மதுரைப் பல்கலைக் கழகத்தினிடத்திலே கேட்டிருக்கிறோம். அனேகமாக வருகின்ற ஆண்டிலே அவர்கள் அனுமதி அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, இம்மாதிரி வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழகம் அனுமதி தரவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பல்கலைக் கழக ரிஜிஸ்டார் அங்கே வந்திருந்தபோது இது சம்பந்தமாக நானும் நண்பர் குப்புசாமி அவர்களும் நேரிலேயே எடுத்துச் சொல்லியபோது இந்த ஆண்டு இந்தச் சங்கடங்களைத் தவிர்ப்பதற்கு நாங்கள் இப்போதே முயற்சியை மேற்கொள்வோம் என்று அவர் சொல்லிவிட்டு சென்றார். ஆனால் அதை ஆரம்பித்ததாகத் தெரியவில்லை. ஆகவே இந்த ஆண்டு இதிலே காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க அமைச்சரவர்கள் நேரடியாகவே தலையிட்டு ஆவன செய்வாரா?

1982 மார்ச் 18] [திரு. என். பழனிவேல்]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சென்ற ஆண்டு இந்த வகுப்பைத் துவங்கிய நிகழ்ச்சியில் ஒரு சிறிய கருத்து வேறுபாடு பல்கலைக் கழகத்திற்கும் இந்த பழனி ஆண்டவர் கலைக் கல்லூரி நிர்வாகத்திற்கும் ஏற்பட்டது. அதை நானும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் தலையிட்டு தக்க முயற்சிகளை மேற் கொண்டு அந்த வகுப்புகளை நடத்துவதற்கு உறுதுணையாக இருந்தோம். இந்த ஆண்டு என்பது இப்போது முடிந்து இனி தொடங்கப்படுகிற கல்வி ஆண்டு என்றுதான் பொருள். அநேக மாக பல்கலைக் கழகம் வருகிற கல்வி ஆண்டில் நிச்சயமாக அந்த அனுமதியைத் தரும் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அருள்மிகு பழனி ஆண்டவர் தேவஸ்தானத்தில் இருந்து எம்.காம்., எம்.ஏ., போன்ற கலை வகுப்புகளை தொடர்வதோடு தொழிற்கல்வியை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கிற பாலிடெக்னிக்ஸ் போன்றவற்றை ஆண்களுக்கு ஒரு பாலிடெக்னிக் பெண்களுக்கு ஒரு பாலிடெக்னிக் என்று தனித்தனியாக ஆரம்பிக்க ஏதாவது முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா? இல்லையென்றால் அவ்வாறு மேற்கொள்ள அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மிகுந்த விவரம் தெரிந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் ஒரு மிகப் பெரிய செய்தியை தெரிந்து கொள்ளாது ஒரு கேள்வி கேட்டிருப்பது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. இப்போது பழனி ஆண்டவர் ஆலயத்தின் சார்பில் பெண்கள் பாலிடெக்னிக் ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆண்களுக்கு ஒரு பாலிடெக்னிக் துவங்கவேண்டுமென்று அந்த அறங்காவலர் குழு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கல்வித் துறைக்கு அந்த மாதிரி விண்ணப்பமும் செய்திருக்கிறார்கள்.

திரு. கே. குப்புசாமி : 1981—82-ல் பழனி ஆண்டவர் கலைக் கல்லூரியில் எம்.காம். வகுப்பு ஆரம்பித்திருப்பதால், பிஸிக்ஸ், மாத்தமட்டிக்ஸ் துறைகளிலும் எம்.எஸ்ஸி. கொண்டுவருதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பல்வேறு விவரங்களை யெல்லாம் இந்த ஒரு கேள்வியில் நான் பதில் அளிக்க இயலாது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக அந்தக் கருத்துக்களையெல்லாம் தெரிவித்தால் அந்த நிர்வாகக் குழுவிற்கு அனுப்பி அதையும் பரிசீலிப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்.

அரசு வனத்துறை நிலங்களை தனியார்களுக்கு வழங்குதல்.

***வினா எண். 465—திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வன இலாகாவின் நிலங்கள் 1979, 1980 வருடங்களில் தனி நபர்களுக்கோ, தனியார் நிறுவனங்களுக்கோ வழங்கப்பட்டுள்ளதா?